அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :140/2016
தேதி. :06/09/2016

# தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து கர்நாடகாவில் ஆங்காங்கே போராட்டம் நடத்துவது கண்டனத்துக்குரியது – அனைவரும் ஒற்றுமையுணர்வுடன் செயல்பட வேண்டும் சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் அறிக்கை

காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின் படி கர்நாடகம் தண்ணீர் திறந்து விடாததால் தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடந்த ஆகஸ்ட் 22ந்தேதி தமிழ்நாடு அரசு தொடர்ந்த இடைக்கால மனுவில் உடனடியாக தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று குறிப்பிடபட்டிருந்தது. ஜூன் முதல் ஆகஸ்ட் வரை கர்நாடக அரசு 74.645 டிஎம்சி தண்ணீர் திறந்து விட்டிருக்க வேண்டும். ஆனால் 24.593 டிஎம்சி தண்ணீர் தான் திறந்து விட்டுள்ளது. மீதமுள்ள 50.052 டிஎம்சி தண்ணீரை உடனடியாக திறந்து விட வேண்டும். இந்நிலையில் உச்சநீதிமன்றம் அந்த மனுமீதான விசாரணையில் தமிழகத்துக்கு விநாடிக்கு 15ஆயிரம் கன அடி வீதம் 10 நாள்களுக்கு காவிரியின் மூலம் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது.

இந்த தீர்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு – கர்நாடகா எல்லையில் கர்நாடகாவை சேர்ந்த பல அமைப்புகள் போராட்டம் நடத்தி வருவது கண்டனத்துக்குரியது ஆகும். மேலும் இவர்களது போராட்டம் மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்து கடையடைப்பு, பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை, எல்லைப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு போன்று பல சிக்கல்களை உருவாக்கியுள்ளது. பேருந்துகள் இயக்கப்படாததால் பொதுமக்கள் சரக்கு வாகனங்களில் அளவுக்கு மீறி பயணம் செய்கின்றனர். இதனால் உயிர்சேதம் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன. எனவே உச்சநீதிமன்றம் கூறிய வாழு, வாழவிடு என்ற வாக்கியத்தின் அடிப்படையில் நடந்து கொண்டு இரு தரப்பினருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட தீர்ப்பை மதித்து போராட்டங்களை கைவிட்டு ஒற்றுமையுணர்வோடு செயல்படுமாறு என் சார்பிலும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த விவகாரத்தில் தமிழக அரசு என்ன செய்யப்போகிறது என்று கேள்வி கேட்காமல் தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் காவிரியில் இருந்து தமிழகத்துக்கான தண்ணீர் பெறுவதில் முழுவீச்சாக போராடி கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கி, ஒற்றுமையுடன் தண்ணீர் பெற பாடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

***ஆர்.சரத்குமார் B.Sc***
***நிறுவனத் தலைவர்***